[1993 ஏப்ரல் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 310 திருமதி ப. சரஸ்வதி, இருக்கையில் இல்லை.

வினா எண் 311, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

311—

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.

*11029— டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் கீழ், இந்திய விஞ்ஞானிகளுடன், இத்துறையில் சிறந்த அயல்நாட்டு விஞ்ஞானிகளை வரவழைத்து இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது. வெளிநாட்டு விஞ்ஞானிகளை இத்திட்டத்திற்காக வரவழைக்கும் கருத்து இல்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் குறித்து இதுவரை அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அவையில் கூறுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் இராமநாதபுரத்தில் மேல்குடுமனூர் மற்றும் நெச்சிவாயல் ஆகிய இடங்களில் இரண்டு உப்புநீரை குடிநீராக்கும் நிலையங்களும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் புத்தகரத்தில் ஒரு நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. மைய அரசின் உதவியுடன், தொழில் நுட்ப மையத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 உவர்ப்பு நீரை குடிநீராக்கும் நிலையங்களும், தென்னாற்காடு மாவட்டத்தில் 9 உவர்ப்பு நீரை குடிநீர் ஆக்கும் நிலையங்களும் நிறுவப்பட்டு பராமரிப்பில் உள்ளது. சென்னை

1993 ஏப்ரல் 12]

நகர குடிநீர் தேவையை— கடல்நீரை குடிநீர் ஆக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மேற் கண்ட குழு 1991-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 4 மில்லியன் லிட்டர் அளவு கொண்ட கடல்நீரை குடிநீர் ஆக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பரிந்துரை உள்ளது. புதிய டாலர் மதிப்பீட்டின்படி மேற்கூறிய திட்டம் 30 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.

முற்பகல் 10-30

சென்னை நகரம் தவிர கடலோர நகரங்கள் மற்றும் கிராமங்களிலே கடல் நீரை குடிநீராக்கும் திட்டங்களுக்கு ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. 21—4—1992 அன்று இச் செயற்குழு கூடியது. சென்னையில் ஒரு நாளைக்கு 45 லட்சம் லிட்டர் உப்பு நீரை குடிநீராக்கும் இரண்டு நிலையங்களும், சாயல்குடியில் ஒரு நிலையமும், இராமநாதபுரம், கடலூர் நாகப்பட்டினம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் 5 லட்சம் லிட்டர் உப்பு நீரை குடிநீராக்கும் நிலையங்கள் ஒவ்வொன்றும், தமிழகக் கடலோரத்தில் சுமார் 100 கிராமங்களில் 10,000 முதல் 50,000 லிட்டர் உப்பு நீரைக் குடிநீராக்கும் 100 நிலையங்கள் அமைக்கவும் பரிந்துரை உள்ளது. இதுசம்பந்தமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>டாக்டர் வெ. சரோஜா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் சவுதி அரேபியா போன்ற மேலை நாடுகளில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட் டம் மிக எளிய முறையில் செயல்படுத்தப்படுவதாக அறி கிறோம். அந்நாட்டு விஞ்ஞானிகளோடு நம் நாட்டு விஞ்ஞானி களும் கலந்து ஆலோசிப்பதன் மூலம் காலத்தைச் சேமிப்ப தோடு தமிழ்நாட்டில் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு காண முடியும் என்பதால், அரசு மீண்டும் இதைப் பரி சீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் போது தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி கிராமத்தில் 44 கோடி ரூபாய் செலவில் ஒரு நிலை யம் அமைக்க பி.எச்.இ.எல். நிறுவனத்தோடு கலந்து, திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, விரைவில் அது நிறைவேற்றப்படுவதற்கான ஆலோசனைகளும், பரிந்துரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றது. விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். பி.எச்.இ.எல். நிறுவனம்

அதற்கான தகுந்த பல்வேறு தொழில் நுட்பங்களை எல்லாம் அரசிடம் கொடுத்திருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற இருக்கிற காரணத்தாலே வெளி நாட்டிலிருந்து விஞ்ஞானிகளை அழைத்து, பரிந்துரைகள் கேட்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி,கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல்நீரைக் குடிநீராக்கும்போது ஒரு லிட்டர் கடல்நீரைக் குடிநீர் ஆக்குவதற்கு அரசுக்கு என்ன செலவாகும் மற்றும் தொழிற் சாலைகளுக்கு வழங்கப்படுகின்றபோது, தூய்மை அல்லாத நீரை, அதாவது சாக்கடை நீரை தூய்மைப் படுத்தி வழங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? காரணம், மெட்ரோ வாட்டர், போர் வெல் வாட்டர் போன்றவற்றை நாம் குடிநீருக்குப் பயன்படுத்திக் கொண்டு, சாக்கடை நீரைச் சுத்தப்படுத்தி, தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் குடிநீரைச் சேமிக்க முடியும் என்ற நிலை இருப்பதால், அதையும் அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், அதற்குப் பதில் தர இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பால கிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு நீரைக் குடிநீராக்குகின்ற திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியில் பல இடங்களில் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஒரு சிரமம் என்னவென்று சொன்னால், ஒரு கிராமத்தில் ஒரு பிளான்ட் போடுவதற்கு 20-லிருந்து 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு பதிலாக கடல் நீரை நேரடியாக எடுத்து, நல்ல தண்ணீராக்கி எல்லா கிராமங்களுக்கும் குழாய்கள் மூலம் தருகின்ற திட்டத்தை நம்முடைய அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எச்.இ.எல். நிறுவனத்தோடு தமிழகத்தினுடைய குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் எல்லாம் கலந்து, இராமநாதபுரம் மாவட்டத்தினு

டைய முழுமையான குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்க வேண்டுமென்று, சுமார் 52 கோடி ரூபாய் செலவில் பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு, அந்தத் திட்டங்கள் எல்லாம் அரசினுடைய ஒப்புதலுக்காக வர இருக்கின்றன. இந்த ஒப்புதல் கிடைத்தவுடன், இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் குடிநீர்த் தட்டுப்பாட்டை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு முழுமையாகத் தீர்த்து வைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீர் ஆக்குகின்ற திட்டத்தின் கீழ் வெளி நாட்டிலிருந்து விஞ்ஞானிகளை அழைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். சரோஜா அவர்கள் சொல்லும்போது, வெளி நாடுகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் விதத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு குவைத் போன்ற நாடுகளில், குடிப்பதற்கு மார்க்கமே கடல்நீர்தான். அந்த நாடுகளில் நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி, கடல்நீரைக் குடிநீராக்குவதோடு மட்டுமல்லாமல், அப்படி மாற்றுகின்றபோது அங்கே உருவாகிற தெர்மல் பவரைக் கொண்டு, தெர்மல் எலக்ட்ரிசிடி உற்பத்தி செய்து, அதையும் பயன்படுத்துகிறார்கள். எனவே வெளி நாட்டு விஞ்ஞானிகளை வரவழைத்து அவர்கள் டெக்னாலஜியை நாமும் பயன்படுத்தினால் குடிநீர் மட்டுமல்லாமல், மேலும் பல நன்மைகள் நம் மாநிலத்திற்குக் கிடைக்கும். வெளிநாடுகளில் லட்சக்கணக்கான லிட்டர் கடல் நீரைக் குடிநீராக அங்கே மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதுசம்பந்தமாக வெளிநாட்டு விஞ்ஞானிகளை வரவழைத்து அவர்களுடைய ஆலோசனைகளைப் பெறுவதில் அரசு கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் இருக்கிற அதிகாரிகள், பொறியியல் வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மதிநுட்பங்கள் எல்லாம் இருக்கின்றன. நம்மிடத்திலே இருக்கிற நிலைமை என்னவென்றால் நிதிப்பற்றாக்குறையின் காரணமாகத்தான் இத்திட்டங்களை விரைவாகவும் வேகமாகவும் நிறைவேற்ற

முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், தமிழ்நாட்டில் இருக்கிற விஞ்ஞானிகளிடத்திலே இது சம்பந்தமாக எல்லா விதமான மதி நுட்பங்களும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 312, திரு. எம்.கே. பாலன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

312—

போலி ரேசன் அட்டைகளை ஒழிக்க மீண்டும் கணக்கெடுப்புப் பணி.

*11857—திரு. எம்.கே. பாலன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போலி ரேசன் அட்டைகளை ஒழிக்க மீண்டும் ஒரு முறை கணக்கெடுப்பு செய்து புதிய அட்டைகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இப்பணி தொடங்கும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போலிக்குடும்ப அட்டைகளை ஒழிக்க மீண்டும் ஒருமுறை கணக்கெடுப்பு செய்து புதிய அட்டைகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள போலி அட்டைகள் சென்ற ஆண்டு மட்டும் சுமார் ஐந்தரை லட்சம் அளவுக்குக் களையப்பட்டு விட்டன. இவ்வாண்டு புதிய அட்டைகள் வழங்கியிருக்கிறோம். அதிலேயே கணிசமான அளவுக்கு போலி அட்டைகள் களையப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி அட்டைகளை ஒழிக்க ஒவ்வொரு வீடாகக் கணக்கெடுப்பு எடுத்திருந்தால் அதிக அளவிலே போலி அட்டைகள் எல்லாம் ஒழிந்திருக்கும். அதே நேரத்திலே கார்டு இல்லாத மக்களுக்கெல்லாம் புதிய அட்டைகளும் போய்ச் சேர்ந்திருக்கும். கார்டு இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டு தேவை என்கிறபோது அதற்கு விண்ணப்பிக்க அரசு உத்தரவிட்டு இருந்தும் கூட பிப்ரவரி மாதம் 28-ந் தேதி தான் கடைசி தேதி என்று அறிவித்த பிறகும் கூட மக்கள் இன்